# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2467 - 2025 දෙසැම්බර් මස 12 වැනි සිකුරාදා - 2025.12.12

2467ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி II - சட்டம் சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்ற விசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக்கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | 120 |
| நானாவித அறிவித்தல்கள் | 120 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2026, சனவரி மாதம் 02ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025,திசெம்பர் மாதம் 19ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ்.டீ.பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் ( பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

119- B 82745 - 403 (2025/12)

# நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல்

எனது இல. HA/05/20/01/01/35

பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நொத்தாரிசுகளின் அலுவலக பதவி விலகலுக்கான விண்ணப்பங்கள் அவர்களின் பெயருக்கு எதிரில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கௌரவ பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதனை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

| *இல.* | *பெயர்* | *கடமைக்காக அதிகாரமளிக்கப்பட்டுள்ள நிதி நிர்வாக வலயம்* | *நொத்தாரிசு அலுவலக மொழி(கள்)* | *நொத்தாரிசு அலுவலகத்திலிருந்து பதவி விலகிய திகதி* |
|---|---|---|---|---|
| 1 | திரு. பலிஹபிட்டிய கமகே சிறில் டயஸ் | தங்காலை | சிங்களம் | 2025.03.21 |
| 2 | திருமதி சுஜாதா விஜயலக்ஷ்மி லியனகே | கொழும்பு | சிங்களம் | 2025.03.31 |
| 3 | திரு. ஜயசுந்தர முதியன்சேலாகே தயாரத்ன பண்டா ஜயசுந்தர | குருநாகல் | சிங்களம் | 2024.11.01 |
| 4 | திரு. உடகே கங்கானம்கே தொன் கௌஷித ஹிமால் உடகே | பாணந்துறை | ஆங்கிலம் சிங்களம் | 2025.03.28 |
| 5 | திரு. பிரசஞ்ஜீவ பட்டி ஆராச்சி | பாணந்துறை | சிங்களம் ஆங்கிலம் | 2024.03.01 |

கௌரவ அமைச்சின் ஆணைப்படி,

எஸ். ஆலோக பண்டார,
செயலாளர்,
பொதுநிர்வாக, மாகாண
சபைகள் மற்றும் உள்ளூராட்சி
அமைச்சு.

கொழும்பு,
2025.11.20.

12-154

# நானாவித அறிவித்தல்கள்

## மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றத்தில் (கொழும்பில் நடைபெறுகின்றது)
## குடியியல் / வர்த்தக நியாயாதிக்க அதிகாரத்தை நடைமுறைப்படுத்தல்

வழக்கு இலக்கம்: CHC /61/ 2025/CO
தன்மை: முடிவுக்கு வருகிறது
செயல்முறை :சுருக்கம்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிறுவனங்கள் சட்டத்தின் பகுதி XII இன் பிரிவு 270 இன் கீழ் (திருத்தப்பட்டபடி) அஹங்காமாவின் பிரேமா வெல்ஹெங்கோடாவில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்ட ஸ்கோபி ( பிரைவேட்) லிமிடெட் ( PV 00213124) இன் 1939 ஆம் ஆண்டு நிறுவனங்களை மூடுவதற்கான விதிகளுடன் சேர்த்து நீதிமன்றத்தால் முடிக்கப்படுவதற்கான விண்ணப்பம் தொடர்பான விடயம் தொடர்பானது.

சமத் தேஜான் கம்மம்பில,
இல. 53/1,
பெரேரா அவனியு.
கொஹுவல.

*- மனுதாரர்-*

*எதிராக*

ரவி டயஸ் பண்டாரநாயகே,
இல. 24, கௌவர் பாதை, கொழும்பு -05.

*- பிரதிவாதி-*

மேற்கூறிய நிறுவனத்தை மூடுவதற்கான மேல் மாகாண உயர் நீதிமன்றத்தின் மனு, கொழும்பில் உள்ள அதன் சிவில் அதிகார வரம்பான ஹோல்டனைப் பயன்படுத்தவதற்கான மனு, மேற்கூறிய நீதிமன்றத்தில் 2025, ஒற்றோபர் 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டது என்பதையும் , மேற்கூறிய மனுவை 2026, சனவரி 13 ஆந் திகதியன்று நீதிமன்றத்தால் விசாரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது என்பதையும் மேற்கூறிய மனுவின் மீது உத்தரவு பிறப்பிப்பதை ஆதரிக்கவோ அல்லது எதிர்க்கவோ விரும்பும் மேற்கூறிய நிறுவனத்தின் எந்தவொரு பங்களிப்புக் கடனாளியும் விசாரணையின் போது நேரில் அல்லது அவரது வழக்கறிஞர் மூலம் அந்த நோக்கத்திற்காக ஆஜராகலாம் என்பதையும் மேலும் மனுவின் நகல் மேற்கூறிய நிறுவனத்தின் எந்தவொரு கடன் வழங்குநருக்கும் அல்லது பங்களிப்பாளருக்கும், அதற்காக நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தி, கீழே கையொப்பமிடப்பட்ட முறையில் வழங்கப்படும் என்பதையும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கையொப்பமிட்டவர்,
ஏ.டி.ஷாயமாலி ஐ. அத்துகோரல,
மனுதாரரின் வழக்கறிஞர்,
இல. 166/1, ஹல்ஃப்ஸ்டோர்ப் தெரு, கொழும்பு 12.

**குறிப்பு;** மேற்கூறிய மனுவின் விசாரணையில் ஆஜராக விரும்பும் எந்தவொரு நபரும், மனுதாரரின் வழக்கறிஞர் சார்பாக மேலே குறிப்பிடப்பட்ட வழக்கறிஞருக்கு அவ்வாறு செய்வதற்கான தனது நோக்கத்தை எழுத்துபூர்வமாக அறிவிக்க வேண்டும். அல்லது அஞ்சல் மூலம் அனுப்ப வேண்டும். அறிவிப்பில் அந்த நபரின் பெயர் மற்றும் முகவரி அல்லது ஒரு நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி, அல்லது அவரது அல்லது அவர்களின் வழக்கறிஞர் ( ஏதேனும் இருந்தால்) குறிப்பிடப்பட வேண்டும். மேலும் அது வழங்கப்பட வேண்டும். அல்லது அனுப்பப்பட்டால் 2026, சனவரி 12 ஆந் திகதி பிற்பகல் ஆறு ( மாலை 6.00) மணிக்குள் மேற்கூறிய பெயரைச் சென்றடைய போதுமான நேரத்திற்குள் அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

12- 160